[8th March 1958

THE HON. SRI M. A. MANICKAVELU : எங்கெங்கே கிணறு வெட்ட வேண்டுமென்பதற்கு தகவல் இருக்கிறது என்றுதான் நினைக்கிறேன்.

SRI M. JAGANNATHAN : தலைவர் அவர்களே, ஹரிஜன முன்னேற்றத்திற்கு வேறு பல துறைகளில் சர்க்கார் செலவு செய்வதைக் காட்டிலும், முதலில் ஹரிஜனங்களுக்கு குடி தண்ணீர் விஷயத்தில் அக்கரை செலுத்தி, அந்த வசதியைச் செய்து கொடுக்க முன் வருவார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : மற்ற வசதிகளை விட குடி தண்ணீர் வசதி ரொம்ப முக்கியம் என்று சர்க்கார் கருதுகிறது. ஹரிஜனங்களுக்கு மாத்திரமல்ல, மற்ற எல்லோருக்கும் குடி தண்ணீர் அவசியம் என்று தான் கருதுகிறது.

* 249 *Q.*—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Government have received any representations recently from the Harijans of Chettikuppam village in Merkanam firka, Tindivanam taluk, regarding provision of drinking water wells in their colonies ; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) No, Sir.

(*b*) Does not arise. The Collector of South Arcot has however reported that action is being taken to provide a well in the village.

SRI A. GOVINDASAMY : இந்த கிராமத்தில் கிணறு வெட்டவேண்டுமென்று எப்போது விண்ணப்பம் வந்தது. அதை வெட்டுவதில் ஏன் காலதாமதம் ஆகிறது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இதைப் பற்றி செட்டிக்குப்பம் கிராமத்திலிருந்து கோரிக்கை வரவில்லை. இருந்தாலும் அரசாங்கம் கிணறு வெட்டவேண்டுமென்று கருதுகிறது.

Sago Industry

* 250 *Q.*—SRI M. P. SUBRAMANIAM : Will the Hon. the Minister for Industries be pleased to state the steps taken by the Government to develop the sago industry at Salem on the lines suggested by the Tariff Commission.

THE HON. SRI R. VENKATARAMAN : A statement[a] furnishing the information is laid on the table of the House.

SRI M. P. SUBRAMANIAM : ஸார், இந்த ஜவ்வரிசி நிபுணர் குழு சிபாரிசுப்படி சேலத்தில் ஒரு ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்தப்படவேண்டுமென்றிருந்தும், ஏன் இன்னும் ஏற்படுத்தவில்லை என்று அமைச்சர் கூற முடியுமா ? சேலத்தில் உற்பத்தி செய்யக்கூடிய ஜவ்வரிசி சிறு குழந்தைகளுக்கும், நோய்வாய்ப்பட்டவர்களுக்கும் நல்ல சத்துள்ள உணவாயிருப்பதால், நிபுணர் குழு சிபாரிசுகளை அமுல் நடத்துவார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இந்த சிபாரிசுகளெல்லாம் சர்க்கார் பரிசீலித்துக்கொண்டிருக்கிறார்கள். அது மாத்திரமல்ல. அவர்கள் 5 சிபாரிசுகளைச் செய்திருக்கிறார்கள். எல்லாவற்றையும் சொல்லிவிடலாம் என்று நினைக்கிறேன். ஒன்று சுகாதார முறையில் இந்த ஜவ்வரிசி தயாரிப்பது, இரண்டாவது, 5,000 எக்கர் நிலம் ஸேகோ மானுபாக்சரர்ஸ்

---

a Printed as Appendix II on pages 544–545 infra.